சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை.R. பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2025-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15-ம் நாள் திங்கள்கிழமை

இடைமனு எண்.2/2025

இன்

அசல் வழக்கு எண்.120/2017

....

மணியரசன்
(மேற்படியாரின் மனைவியும் பவர்
ஏஜண்டுமான தேவி மூலம்) ....மனுதாரர்/பிரதிவாதி

**/எதிர்/**

நாச்சியப்பன் ...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 02.12.2025-ம் தேதியன்று வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.N.சேகர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.J.வேலாயுதம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

**<u>உத்தரவு</u>**

பிரதிவாதியான மணியரசன் என்பவர் தனது மனைவியான தேவி என்பவருக்கு கடந்த 04.07.2025-ம் தேதி எழுதி கொடுத்துள்ள பொது அதிகார பத்திரத்தை ஏற்றுக்கொண்டு பிரதிவாதியான மணியரசன் என்பவருக்காக தாவா வழக்கை மேல்நடத்துவதற்கு அனுமதி வழங்க உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் கட்டளை 3, விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151ன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>**

பிரதிவாதியின் மீது வாதியான நாச்சியப்பன் என்பவர் வாதிக்கு எழுதிக் கொடுத்த 11.06.2015-ம் தேதிய கிரைய ஒப்பந்தத்தின்படி கிரைய பாக்கித் தொகை ரூ.50,000/-ஐ பிரதிவாதி வாதியிடமிருந்து பெற்றுக்கொண்டு தாவா சொத்தினைப் பொறுத்து வாதிக்கு பிரதிவாதி வாதியின் செலவில் கிரையப்பத்திரம் எழுதி பதிந்து

கொடுக்கும்படிக்கும் தவறும் பட்சத்தில் நீதிமன்றமே வாதிக்கு பிரதிவாதி ஸ்தானத்திலிருந்து கிரையப்பத்திரம் பதிவு செய்து கொடுக்கத்தக்கதாய் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து விசாரணையில் இருந்து வருகிறது. தாவா வழக்கின் பிரதிவாதிக்கு இருதயத்தில் பிரச்சனை இருப்பதாலும் நரம்பு தளர்ச்சி இருப்பதாலும் சுகர் பிரச்சனை இருப்பதாலும் வயதாகி உடல்நிலை சரியில்லாமல் எழுந்து நடக்கக்கூட இயலாமல் இருப்பதாலும் வழக்கு சொத்து சம்பந்தமாக வழக்கின் வாய்தாக்களுக்கு ஆஜராக இயலாததாலும் வழக்கை நடத்த முடியாமல் இருப்பதால் தாவா வழக்கை நடத்துவது உள்பட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு ஏதுவாக பிரதிவாதி தனக்கு கடந்த 04.07.2025-ம் தேதியன்று இந்த வழக்கின் தாவா சொத்து சம்பந்தமாக இந்நீதிமன்றத்தில் இந்த வழக்கை நடத்துவதற்கு ஏதுவாக பவர் பத்திரம் மூலம் ஒரு பொது அதிகார பத்திரத்தை நோட்டரி பப்ளிக் அட்வகேட் கையொப்பம் செய்து பிரதிவாதி எழுதி கொடுத்துள்ளார்.

மேற்படி அதிகார பத்திரத்தை ஏற்றுக்கொண்டு பிரதிவாதிக்காக அவரது மனைவியாகிய தன்னை இந்த வழக்கை மேல்நடத்த அனுமதி வழங்க வேண்டியது அவசியமாக உள்ளது. இல்லாமல் போனால் மனுதாரருக்கு கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும். எனவே 04.07.2025- தேதியன்று எழுதி கொடுத்துள்ள பொது அதிகார பத்திரத்தை ஏற்றுக்கொண்டு மனுதாரரை அவரது கணவருக்காக தாவா வழக்கை மேல் நடத்துவதற்கு அனுமதி அளித்து உத்தரவிடவேண்டும்.

3) <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்.</u>

தாவா அசல் வழக்கு நடவடிக்கைகளை காலதாமதம் செய்யவேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்தோடு மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். தாவா சொத்தினை எதிர்மனுதாரர் /வாதி கிரையம் கொடுக்க ஒப்புக்கொண்டு தாவா சொத்தான வீட்டிற்கு கிரையத் தொகையான ரூ.5,50,000/- என நிர்ணயம் செய்து பிரதிவாதி குடும்ப செலவிற்காக எதிர்மனுதாரர்/வாதியாகிய தன்னிடமிருந்து ரூ.5,00,000/-த்தை கிரைய முன்பணமாக பெற்றுக்கொண்டு பாக்கி கிரையத் தொகையான ரூ.50,000/-ஐ தன்னிடமிருந்து பிரதிவாதி ஒரு வருட காலத்திற்குள் பெற்றுக்கொண்டு தாவா சொத்தினைப் பொறுத்து பிரதிவாதி வாதியின் செலவில் தன் பெயருக்கோ அல்லது தான் குறிப்பிடும் நபர் பெயருக்கோ கிரைய பத்திரம் எழுதி பதிந்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு 11.06.2015-ல் ஒரு கிரைய ஒப்பந்தத்தை

பிரதிவாதி வாதிக்கு சாட்சிகள் முன்னிலையில் எழுதி பதிந்து கொடுத்துள்ளார். மேற்படி கிரையம் பதிந்து கொடுக்காததால் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கு வாதி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப் பட்டு மனுதாரர் சாட்சி விசாரணைக்காக இருந்து வருகிறது. மேற்படி மனுதாரர்/ பிரதிவாதிக்கு இருதயம் மற்றும் நரம்பு தளர்ச்சி, சர்க்கரை வியாதி நோய் உள்ளதால் எழுந்து நடக்க இயலாத நிலையில் இருப்பதாக கூறியிருப்பது நீதிமன்ற விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டும் என்றும் மேலும் இதற்கு சான்றாக எந்த ஒரு மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் வேண்டுமென்றே மனுதாரர் பெய்யாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரரின் மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் மனு அனுமதிக்கத் தக்கதா என்பதேயாகும்?

5. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

6. தாவா அசல் வழக்கின் மனுதாரர்/பிரதிவாதிக்கு இருதய பிரச்சனை, நரம்பு தளர்ச்சி, சுகர் பிரச்சனை நோய்கள் ஏற்பட்டு உடல்நிலை சரியில்லாமலும். எழுந்து நடக்கக்கூட இயலாமலும் இருப்பதால் மனுதாரர்/பிரதிவாதி அவரது மனைவிக்கு எழுதிக்கொடுத்த பவர் பத்திரத்தின் அடிப்படையில் மனுதாரர்/பிரதிவாதியின் மனைவி வழக்கை மேல்நடத்துவதற்கு அனுமதி அளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை ஆட்சேபணை செய்து தாவா அசல் வழக்கு நடவடிக்கைகளை காலதாமதம் செய்யவேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்தோடு மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் மனுதாரர்/ பிரதிவாதிக்கு இருதயம் மற்றும் நரம்பு தளர்ச்சி, சர்க்கரை வியாதி நோய் உள்ளதால் எழுந்து நடக்க இயலாத நிலையில் இருப்பதாக கூறியிருப்பது நீதிமன்ற விசாரணையை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், பிரதிவாதிக்கான மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் வேண்டுமென்றே மனுதாரர் பெய்யாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**7**) அசல் வழக்கானது ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு உடல்நலக்குறைவு காரணமாக மனுதாரரின் மனைவியை வழக்கை மேல்நடத்த அனுமதியளிக்கக் கோரும் காரணம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்திருந்தாலும் அசல் வழக்கின் தீர்வானது இருதரப்பு விசாரணை மற்றும் வாதுரைக்கு பின்பு தான் முடிவு செய்ய இயலும். மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு கஷ்ட நஷ்டம் ஏற்படுவதாக மனுதாரர் மனுவில் தெரிவித்துள்ளார். மனுதாரரின் மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்பட போவதில்லை. எனவே மனுதாரரின் மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என கருதி மேற்படி மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக தாவா மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2025-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2025.12.15 13:12:28 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்
தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2025.12.15 13:12:35 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

Subordinate Court, Sivagangai
I.A.No.2/2025 in O.S.No.120/2017
**Draft/Fair/Order**
15.12.2025